1994 ஜனவரி 5]

180--

அன்னூர் அருகம்பாளையத்தில் கயிறு திரிக்கும் குடிசைத்தொழில் மையம் ஏற்படுத்தல்:

***21074-டாக்டர் மு. சீனியம்மாள்:**

மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அன்னூர், அருகம்பாளையத்தில் கயிறு திரித்தல் குடிசைத்தொழில் மையம் ஒன்று ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமத்தில் தொழில்கள் வளர்வதன் மூலமாகத்தான் நகரங்கள் வளரமுடியும்; தேசம் வளர முடியும் என்கின்ற காந்தி கண்ட கனவை இன்றைக்கு நனவாக்கக்கூடிய ஒரே தலைவராக பரிணமித்துக்கொண்டிருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் அவினாசி தொகுதி தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டு அங்கு தொழில் புரிவோருக்கு 15% மானியமாக வழங்கப்படுகிறது.

அன்னூர் பகுதியில் தென்னை மரங்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் அந்தத் தேங்காயை உரித்து எடுத்த பிறகு தென்னை மட்டையை குப்பைகளாகக் கொட்டி, எரிப்பொருளாகப் பயன்படுத்தி வருகிறார்கள். வேலையில்லாதப் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து இன்றைக்கு பெண்களின் மேம்பாட்டிற்கு வழிகாட்டியாக திகழ்கின்ற நமது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்ல ஆட்சியில் மேலை நாடுகளில் காலி டின்களைக் கூட வாங்கி அவர்கள் பொம்மைகள் தயாரித்துக்கொண்டிருக்கும் இந்த வேளையில் குடிசைத் தொழிலை மேம்பாடு செய்கின்ற வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனைச் செய்து தென்னை மட்டையை உபயோகம் செய்து கயிறு திரிக்கும் தொழிற்சாலைகளை அமைத்துத்தர ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னை மட்டையிலிருந்து கயிறு திரிக்கும் தொழிற்சாலை ஊரகத் தொழில் துறையில் வருகிறது. தனிக் கேள்விப் போட்டால் சம்பந்தப்பட்ட அமைச்சர் பதில் சொல்லுவார்.